திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கி, அந்தத் தொகுதி மக்களுடைய தாகத்தைத் தீர்த்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இந்த காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வாடிப்பட்டி பேரூராட்சி விடுபட்டுள்ளது. சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட அந்த பேரூராட்சிக்குட்பட்ட 10 ஊராட்சிகளும் விடுபட்டுள்ளன. அதனை காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்துடன் சேர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வகைப்படுத்துகின்றபோது, எந்தெந்தப் பகுதிகள் எடுக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்கி அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற மற்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே மற்றொரு திட்டத்தின் வாயிலாக தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கும். தண்ணீர் போதவில்லையென்று சொன்னால், கூடுதலான தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

170—

குளிர்பதனக் கிடங்கு

***3703—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 26]

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் தக்காளியைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் தக்காளியைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதிக்குட்பட்ட மணப்பாறை நகரத்திற்கு போக்குவரத்துக் காவல் நிலையம் தந்த எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எனது மணப்பாறை தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே சமர்ப்பித்து என்னுடைய வினாவை எழுப்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழகத்தில் வேளாண்மையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வேளாண்மைத் துறைக்கு 3,804.96 கோடி ரூபாயை ஒதுக்கி விவசாயப் பெருமக்களின் துயர் துடைத்துள்ளார்கள். எங்கள் மணப்பாறை தொகுதியில் முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற விவசாய பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கையான தக்காளியைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், கேள்வியைச் சற்று சுருக்கமாகக் கேளுங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதியில் 188 எக்டேரில் தக்காளி பயிர் செய்யப்பட்டு சுமார் 1,928 மெட்ரிக் டன் தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பகுதியில் உற்பத்தியாகும் தக்காளி மணப்பாறை மற்றும் துவரங்குறிச்சியிலுள்ள மொத்த அங்காடிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து திருச்சி, ஒட்டன்சத்திரம் மொத்த சந்தைகளுக்கு விற்பனைக்குச் செல்கிறது. மணப்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகள் விளைவிக்கும் தக்காளி உட்பட்ட விளைபொருட்களின் விலை வீழ்ச்சியடையும் காலங்களில் குளிர்பதனக் கிடங்கில் சேமித்து வைக்கவும், நல்ல விலை கிடைக்கும் தருணத்தில் விற்பனை செய்யும் வகையிலும், மணப்பாறை தொகுதி, துவரங்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இவ்வசதியை மணப்பாறை தொகுதியைச் சார்ந்த அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழந்த நம்முடைய இரட்டை இலைச் சின்னத்தை மீட்டுத் தந்த, மருங்காபுரி ஒன்றியத்திற்குட்பட்ட துவரங்குறிச்சியில் விவசாயிகளின் துயர் துடைக்க, தக்காளி குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தந்ததற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

2012 ஏப்ரல் 26]

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி, தீர்த்தம் மற்றும் என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட, தளி, உரிகம் பகுதியிலே அதிக அளவில் புளி விளைகிறது. ஆண்டுக்கு சுமார் 10,000 டன் புளி விளைகிறது. அந்தப் புளியைப் பாதுகாக்கும்வகையிலே ராயக்கோட்டையிலே ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில், மேற்படி தொகுதியிலே தேவை இருக்கும்பட்சத்தில், விவசாயிகள் சிரமப்படுகின்றார்கள்; எனவே குளிர்பதனக் கிடங்கை அவசியம் அமைக்க வேண்டுமென்று இருக்கும்பட்சத்தில், இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட்டிற்கு தினமும் அனைத்து வகையான காய்கறிகளும் விவசாயிகள்மூலம் விற்பனைக்கு வருகின்றன. இந்தக் காய்கறிகள் சென்னை மற்றும் வெளி மாவட்டங்களுக்கு லாரிகள்மூலம் தினமும் அனுப்பப்படுகின்றன. மீதமுள்ள காய்கறிகளைச் சேமித்து வைப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 6 இடங்களில் குளிர்சாதன வசதியுடைய கிட்டங்கியை அமைக்க இருக்கின்றோம். அப்படி அமைக்கும்போது,*

அந்த மாவட்டத்திற்குட்பட்ட விவசாயிகள் அந்த இடங்களிலேயே காய்கறிகளை வைத்து பதப்படுத்திக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலன் காக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் காய்கறிகளைப் பாதுகாக்க ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர் மற்றும் புஞ்சைபுளியம்பட்டி போன்ற இடங்களில் உள்ள மார்க்கெட்டில் இன்றைக்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படி அமைக்கப்படும்போது, உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியையும் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சியில் தக்காளியைப் பாதுகாப்பதற்காக குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளைப் பாதுகாக்கின்ற வகையிலே,*

2012 ஏப்ரல் 26]

கடந்த ஆண்டு *50* இடங்களில் குளிர்சாதனக் கிட்டங்கி அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், காய்கறிகளின் விளைச்சல் எங்கே அதிகமாக இருக்கின்றது என்பதை அறிந்து, இந்த ஆண்டும் *51* குளிர்சாதனக் கிட்டங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனால் அவர்களுடைய மாவட்டத்திலும் இந்தக் குளிர்சாதனக் கிட்டங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்மூலம், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பயன்பெற்றுக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள்சந்தையிலே, அங்குள்ள விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் வகையில், குளிர்பதன வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குளிர்பதனக் கிடங்கு என்று பொதுவாகக் கேட்காமல், எதற்காக என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள்சந்தையில் என்றுதான் சொன்னேன். அது சந்தைதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சந்தையிலே மீன் இருக்கும், உருளைக்கிழங்கு இருக்கும், வெண்டைக்காய் இருக்கும், கத்தரிக்காய் இருக்கும், தக்காளி இருக்கும். ஆகவே, எதற்காக குளிர்பதனக் கிடங்கு தேவையென்று சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *காய்கறிகளுக்காகத்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வியானது, தக்காளியைப் பாதுகாப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே திங்கள்சந்தையிலே குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த வனத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இந்த வருடம் திங்கள்சந்தையிலே காய்கறிகளுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் பகுதியிலிருந்து இந்தியா முழுவதற்கும் முட்டை அனுப்பப்படுகிறது. எனவே, அங்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளுக்காகத்தான் எங்களுடைய துறையின் மூலமாக குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் முட்டை போன்ற பொருட்களுக்கென கிடங்குகள் அமைப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

சந்தன மரங்கள்

***5700—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—